தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### நெற்பயிரில் குருத்துப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த ஆலோசனை

திருநெல்வேலி மாவட்டத்தில் சுத்தமல்லி உள்ளிட்ட பகுதிகளில் நெற்பயிரில் குருத்துப் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து வேளாண் அலுவலர்கள் விளக்கம் அளித்துள்ளனர். இதுதொடர்பாக மானூர் பகுதி வேளாண்மை உதவி இயக்குநர் ஆ.சரஸ்வதி வெளியிட்ட செய்திக்குறிப்பு:

மானூர் வட்டாரத்தில் கோடகன்கால்வாய் பாசனத்தில் சங்கன்திரடு, கல்லூர், நரசிங்கநல்லூர், பழவூர், சுத்தமல்லி உள்ளிட்ட பகுதிகளில் கார்பருவ நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் குருத்துப் பூச்சி தாக்குதல் தென்பட்டால் ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாக முறையினை கட்டுப்படுத்தலாம். குருத்துப் பூச்சிகள் பயிரின் வளர்ச்சிப் பருவத்தில் நடுக்குருத்தைத் தாக்கும். இதனால் நடுக்குருத்து வாடி வைக்கோல் நிறமாகும். பிடித்து இழுத்தால் கையோடு வந்துவிடும். இலையின் நுனியில் உள்ள முட்டைக் குவியல்களைச் சேகரித்து அழிப்பதன் மூலம் இப் பூச்சியின் எண்ணிக்கையை கணிசமாகக் குறைக்கலாம். பரிந்துரைக்கப்பட்ட அளவுக்கு அதிகமாக தழைச்சத்து இடக் கூடாது. ஒரு ஹெக்டேருக்கு ஒரு விளக்குப்பொறி மற்றும் 12 இனக்கவர்ச்சிப் பொறி என்ற அளவில் வைத்து அந்துப் பூச்சியினை கவர்ந்து அழிக்கலாம். பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணித்து அதனுடைய எண்ணிக்கைக்கு ஏற்ப மருந்து தெளிக்க வேண்டும். நடவு வயலில் டிரைக்கோகிரம்மா முட்டை ஒட்டுண்ணியை 5 சி.சி. வீதம் 30 மற்றும் 37 ஆவது நாள்களில் தெளித்து குருத்துப்பூச்சியின் முட்டைகளை அழிக்கலாம். இப்பூச்சியின் பொருளாதாரச் சேத நிலையானது ஒரு சதுர மீட்டருக்கு 2 முட்டைக்குவியல்கள் அல்லது 10 சதவிகித நடுக்குருத்து வாடிக்காய்தல் ஆகும். இவற்றை தாண்டும்போது ஒரு ஹெக்டேருக்கு கார்டாப்ஹைட்ரோ குளோரைடு 50 சதவிகிதம், எஸ்.பி. 1000 கிராம் அல்லது குளோர் ஆன்ட்ரனிலிபுரோல் 18.5 சதவிகிதம், எஸ்.சி.

150 மில்லி அல்லது பிப்ரோனில் 5 எஸ்.சி. 1000-1500 மில்லி அல்லது தயமீதாக்சம் 25 டபுள்யூஜி 100 கிராம் அல்லது குளோர்பைரிபாஸ் 20 ஈ.சி. 1250 மில்லி அல்லது பாஸ்பமிடான் 40 எஸ்.எல். 1250 மில்லி அல்லது பாசலோன் 35 ஈ.சி. 1500 மில்லி என்ற அளவில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்கலாம் என செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஒகேனக்கல்லில்நீர்வரத்து அதிகரிப்பு**

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் காவிரி ஆற்றில் வியாழக்கிழமை நீர்வரத்து நொடிக்கு 19,000 கன அடியாக இருந்தது. கர்நாடக மாநிலத்தில் உள்ள அணைகளில் இருந்து அதிகளவில் உபரி நீர் திறக்கப்பட்டதால், ஒகேனக்கல் காவிரி ஆற்றில் புதன்கிழமை 18,000 கன அடியாக இருந்த நீர்வரத்து, வியாழக்கிழமை 19,000 கன அடியாக அதிகரித்தது. நீர்வரத்து அதிகரித்து இருப்பதால், பிரதான அருவியில் தண்ணீர் ஆர்ப்பரித்துக் கொட்டுகிறது.

# தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**நாமக்கல் ரயில்வே ஸ்டேஷனுக்கு, ஆந்திர மாநிலம் தெனாலியில் இருந்து, 2,500 டன் மக்காச்சோளம் வருகை**

நாமக்கல்: நாமக்கல் ரயில்வே ஸ்டேஷனுக்கு, ஆந்திர மாநிலம் தெனாலியில் இருந்து, 2,500 டன் மக்காச்சோளம் வந்ததை, லாரிகள் மூலம் அரவை குடோனுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. தமிழகம் மட்டுமின்றி, ஆந்திரா, கர்நாடகா, பீஹார் உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து, அரிசி, கோதுமை, மக்காச்சோளம் போன்ற அத்தியாவசிய பொருட்கள் மற்றும் கால்நடைகளுக்கு தேவையான தீவன பொருட்கள், சரக்கு ரயில் மூலம் ஏற்றிவந்து, நாமக்கல் ரயில்வே ஸ்டேஷனில் இறக்கி வைக்கப்படுகிறது. அவை, சம்பந்தப்பட்ட அரசு மற்றும் தனியார் குடோன்களுக்கு, லாரிகள் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு, அரவை நிறுவனங்களுக்கு அனுப்பப்படுகிறது.

இந்நிலையில், நேற்று, ஆந்திரா மாநிலம், தெனாலியில் இருந்து, சரக்கு ரயில் மூலம், 41 பெட்டிகளில், 2,500 டன் மக்காச்சோளம், நாமக்கல் ரயில்வே ஸ்டேஷன் வந்ததையடுத்து, அவை, அரவை குடோனுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

## நான்கரை லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம்

நாமக்கல்: நாமக்கல் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர்கள் சங்கத்தில், நேற்று, நான்கரை லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் போனது. நாமக்கல் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தின் (என்.சி.எம்.எஸ்.,), திருச்செங்கோடு சாலையில் உள்ள குடோனில், பருத்தி ஏலம், நேற்று நடந்தது. ராசிபுரம், நாமக்கல், சேலம், கரூர், புதுச்சத்திரம், எருமப்பட்டி, திருச்செங்கோடு நாமகிரிப்பேட்டை, புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, 100க்கும் மேற்பட்ட விவசாயிகள், 250 பருத்தி மூட்டைகளை, விற்பனைக்கு கொண்டு வந்தனர். சுரபி ரகம் அதிக பட்சமாக, 7,595, குறைந்த பட்சமாக, 7,200 ரூபாய். ஆர்.சி.ஹெச்., ரகம் அதிகபட்சமாக, 4,920, குறைந்தபட்சமாக, 4,600 ரூபாய்க்கு ஏலம் போனது. நேற்றைய ஏலத்தில், மொத்தமாக நான்கரை லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் போனது. விருதுநகர், ராஜபாளையம், திருப்பூர், அவிநாசி, பெருந்துறை, கொங்கணாபுரம், ஊத்தங்கரை, ஆத்தூர், சேலம், திருச்செங்கோடு, ஆகிய பகுதியைச் சேர்ந்த வியாபாரிகள், பருத்தியை ஏலம் எடுத்துச் சென்றனர்.

## ஆந்திராவில் இருந்து 2,500 டன் மக்காச்சோளம் நாமக்கல்லுக்கு வருகை

## நெல் சாகுபடி பணி தீவிரம்

பள்ளிபாளையம்: மேட்டூர் கிழக்கு கால்வாயில் தண்ணீர் திறந்து விடப்பட்டதால், நெல் சாகுபடி செய்ய, வயல்களை தயார்படுத்தம் பணியில், விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். பள்ளிபாளையம் வட்டாரத்தில், 11 ஆயிரம் ஏக்கர் பரப்பில், நெல் சாகுபடி செய்யப்படும். கடந்த மாதம், மேட்டுர் அணையில் இருந்து, கிழக்கு கால்வாயில் தண்ணீர் திறந்து விடப்பட்டது. அதனால், இந்த தண்ணீரை பயன்படுத்தி, பள்ளிபாளையம், ஆலாம்பாளையம், சின்னார்பாளையம், களியனூர்,

தெற்குபாளையம், மாம்பாளையம், வண்ணாம்பாறை, புதுப்பாளையம் மற்றும் சுற்று வட்டாரத்தில், நெல் சாகுபடி செய்யும் பணியில், விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். நடப்பாண்டு, ஐ.ஆர்., 20, பி.பி.டி., பொன்னி ஆகிய விதை ரகங்கள் நடவு செய்ய, விவசாயிகள் முடிவு செய்துள்ளனர்.

**சிறு தானிய பயிர் தோல் நீக்கும் ஆலைகள் அமைக்க கோரிக்கை**

தர்மபுரி: சிறு தானிய பயிர்களின் தோல்களை நீக்க, விவசாயிகள் பங்களிப்புடன், ஆலைகள் அமைக்க, அரசுக்கு, கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தர்மபுரி மாவட்டம், விவசாயத்தை பிரதானமாக கொண்ட மாவட்டம் ஆகும். மேலும், இம்மாவட்டம், மாநில அளவில், கேழ்வரகு, சாமை, சோளம் உள்ளிட்ட சிறுதானிய பயிர் உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கிறது. குறிப்பாக, மாவட்டத்தில் அதிகபட்சமாக, கேழ்வரகு, சாமை, சோளம், கம்பு உள்ளிட்ட சிறுதானிய பயிர்கள், 70 ஆயிரம் ஹெக்டர் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. இதில், மாவட்டத்தில், அதிகபட்சமாக, கேழ்வரகு மற்றும் சாமை அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்தில், ஆண்டு தோறும், சராசரி, இரண்டு லட்சம் டன் என்ற அளவில், சிறுதானிய பயிர்கள் மகசூல் கிடைக்கிறது. மாவட்டத்தில் சிறுதானிய தோல்களை நீக்க இயந்திரங்கள் இல்லாத நிலை உள்ளது. இதனால், விவசாயிகள், சிறுதானியங்களில் இருந்து தோல்களை நீக்க, தேனி மாவட்டத்தில் உள்ள சிறுதானிய தோல் நீக்கி ஆலைகளுக்கு கொண்டு செல்ல வேண்டி உள்ளது. இதுகுறித்து, விவசாயி ஜெகன் கூறியதாவது: தர்மபுரி மாவட்டத்தில், மேட்டு பாங்கான நிலங்கள் அதிகமாக உள்ளது. இதனால், இப்பகுதிகளில் அதிக அளவு, சிறுதானிய பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. தர்மபுரி மாவட்டத்தில், 20 ஆயிரம் ஹெக்டர் சாகுபடி செய்யப்படும், நெல் தோல்களை நீக்க, அதிக ரைஸ் மில்கள் உள்ளன. ஆனால், 70 ஆயிரம் ஹெக்டேர் சாகுபடி செய்யப்பட்டுள்ள, சிறுதானிய பயிர்களின் தோல்களை நீக்க, தர்மபுரி மாவட்டத்தில், ஒரு தொழிற்சாலை கூட இல்லை. இதனால், விவசாயிகள் சிறுதானிய பயிர்களின் தோல்களை நீக்க, தேனி மாவட்டம் உட்பட தென் மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டியுள்ளது. இதனால்,

விவசாயிகளுக்கு, கால விரயம், கூடுதல் செலவு ஏற்படுகிறது. இதை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டுள்ள இடைத்தரகர்கள், விவசாயிகளிடம், சிறுதானிய பயிர்களை, குறைந்து விலைக்கு மொத்தமாக வாங்கிச் செல்கின்றனர். இவ்வாறு, இடைத்தரகர்கள், சிறுதானிய பயிர்களை, விவசாயிகளிடம், குறைந்த விலைக்கு வாங்கி, தேனி மாவட்டத்துக்கு, வாகனங்கள் மூலம் எடுத்துச் சென்று, தோல்களை நீக்கி, வியாரிகளிடம், அதிக விலைக்கு விற்று லாபம் பார்த்து வருகின்றனர். எனவே, தமிழக அரசு மற்றும் மாவட்ட நிர்வாகம், விவசாயிகளின் நலன் கருதி, தர்மபுரி மாவட்டத்தில் உள்ள, எட்டு யூனியன்களிலும், விவசாயிகள் பங்களிப்புடன், சிறுதானிய தோல் நீக்கும் ஆலைகளை நிறுவ, நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், தோல் நீக்கிய சிறுதானிய பயிர்களை விற்பனை செய்ய, மாவட்டத்தில் உள்ள, எட்டு யூனியன்களிலும், அரசு விற்பனை மையம் துவங்க வேண்டும். இவ்வாறு கூறினார்.

### <u>ரூ.15 லட்சம் மதிப்பில் கொப்பரை தேங்காய் ஏலம்</u>

கோபி: காபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், நேற்று நடந்த ஏலத்தில், 309 தேங்காய் பருப்பு மூட்டைகள், 15 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. கோபி ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில், வியாழக்கிழமையான நேற்று, கொப்பரை தேங்காய் ஏலம் நடந்தது. ஈரோடு மாவட்டம் மற்றும் அதன் சுற்று வட்டாரப்பகுதியில் இருந்து, ஏராளமான விவசாயிகள், கொப்பரை தேங்காயை நேற்று ஏலத்துக்கு கொண்டு வந்திருந்தனர். மொத்தம், 72 விவசாயிகள், ஒன்பது வியாபாரிகள் ஏலத்தில் கலந்து கொண்டனர். ஒரு கிலோ கொப்பரை தேங்காய் பருப்பு, 103.09 முதல், 109.33 ரூபாய்க்கும் விலை போனது. மொத்தம், 309 மூட்டைகள், 15 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. கடந்த வாரத்தில் கிலோ, 105.70 ரூபாய்க்கு ஏலம் போனது. நடப்பு வாரத்தில், கிலோவுக்கு, நான்கு ரூபாய் அதிகமாக ஏலமாக போனதாக, கோபி ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் மகேந்திரசிங் தெரிவித்தார்.

**விவசாயிகளுக்கு வணிகர் சங்கம் ஆதரவு**

திருச்சி: திருச்சியில் பாரதிய கிசான் சங்க விவசாயிகள், நடத்தி வரும் உண்ணாவிரத போராட்டத்துக்கு, வணிகர் சங்க பேரவை ஆதரவு தெரிவித்துள்ளது. தமிழகத்தை வறட்சி மாநிலமாக அறிவித்தல், சர்பாசி சட்டம் மூலம், விவசாய நிலம், டிராக்டர்களை ஜப்தி செய்வதை தடை செய்தல் உள்ளிட்டகோரிக்கைளை வலியுறுத்தி, திருச்சி சத்திரத்தில் பாரதிய கிசான் சங்கத்தினர், மாநில துணைத்தலைவர் அய்யாக் கண்ணு தலைமையில், கடந்த 5ம் தேதி முதல் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர். நேற்று ஏழாவது நாளாக, விவசாயிகள் கை, கால்களை கட்டி கொண்டு உண்ணாவிரதம் இருந்தனர். அப்போது, வணிகர் சங்க பேரவை மாநில துணைத்தலைவர் சரவணன், மாநகர செயலாளர் போஸ் செல்வகுமார் ஆகியோர் ஆதரவு தெரிவித்தனர்.

**விலையில்லா ஆடுகள் அமைச்சர் வழங்கல்**

மண்ணச்சநல்லூர்: மண்ணச்சநல்லூர் யூனியனுக்குட்பட்ட தீராம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த, 69 பயனாளிகளுக்கு, எட்டு லட்சத்து, 80 ஆயிரம் மதிப்புள்ள விலையில்லா ஆடுகளை அமைச்சர் பூனாட்சி வழங்கினார். கால்நடைத்துறை மாவட்ட இணை இயக்குநர் மோகனரங்கன் தலைமை வகித்தார். தீராம்பாளையம் பஞ்சாயத்து தலைவர் கிரிபால், ஒன்றிய கவுன்சிலர் கதிர்வேல், முன்னிலை வகித்தனர். கதர் மற்றும் கிராம தொழில்கள் துறை அமைச்சர் பூனாட்சி, 69 பயனாளிகளுக்கு, எட்டு லட்சத்து, 80 ஆயிரம் மதிப்புள்ள விலையில்லா, 276 ஆடுகளை வழங்கினார்.

**முருங்கை உற்பத்தி அதிகரிப்பு கிலோவுக்கு 5 ரூபாய் குறைவு**

கரூர்: அரவக்குறிச்சி வேளாண் விரிவாக்க மையத்துக்கு உட்பட்ட 300க்கும் மேற்பட்ட கிராமங்களில், 20 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் முருங்கை சாகுபடி செய்யப்படுகிறது. பத்தாயிரம் விவசாய குடும்பங்கள் முருங்கை சாகுபடியை நம்பி உள்ளனர். வறட்சி பகுதியான அரவக்குறிச்சியில், குறைவான மழையிலும் விவசாயிக்கு நஷ்டம் இல்லாத சாகுபடியை தரும் பயிராக முருங்கை உள்ளது. இதனால், அரவக்குறிச்சி யூனியன் பகுதியிலும்

அருகிலுள்ள க.பரமத்தியிலும் முருங்கை சாகுபடி அதிகமாக உள்ளது. மரமுருங்கை, கொடி முருங்கை, ஒட்டுரக முருங்கை என பல்வேறு ரகம் முருங்கை பயிர் பயிரிடப்பட்டுள்ளது. அரவக்குறிச்சி, பள்ளப்பட்டி பிரிவுரோடு, வெஞ்சமாங்கூடலூர் பகுதிகளில் உள்ள சந்தை, மற்றும் அரவக்குறிச்சி கமிஷன் மண்டியிலும் கிலோ கணக்கில், முருங்கையை விவசாயிகள் விற்கின்றனர். தவிர, ஒட்டன்சத்திரம், திண்டுக்கல், பெங்களூரு பகுதிகளில் இருந்து வரும் வியாபாரிகள், ஒட்டுமொத்தமாக முருங்கை வாங்கி செல்கின்றனர். மேலும், ஆந்திரா, கர்நாடகா, கேரளா உள்ளிட்ட மாநிலங்களுக்கும் இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது. அரவக் குறிச்சியில் விளையும் முருங்கைக்கு சுவை அதிகம் என்பதால், வெளிமாநில மக்கள் அதிகம் விரும்புகின்றனர். அமராவதி ஆற்றில் தண்ணீர் திறப்பு மற்றும் கடந்த ஒரு மாதமாக லேசான மழையால் முருங்கை உற்பத்தி அதிகரித்துள்ளது. முருங்கை உற்பத்தி அதிகரிப்பால் முருங்கை விலை கிலோவுக்கு ஐந்து ரூபாய் குறைந்துள்ளது. கடந்த வாரத்தில் ஒரு கிலோ 20 ரூபாய்க்கு விற்கப்பட்டது. நடப்பு வாரத்தில் ஒரு கிலோ 15 ரூபாயாக குறைந்துள்ளது.

முருங்கை விவசாயிகள் கூறியதாவது:

மாசியில் முருங்கை சீசன் துவங்கி, ஐப்பசி வரை தொடர்கிறது. சீசன் காலங்களில் அரவக்குறிச்சியில் இருந்து பத்து மெட்ரிக் டன் முருங்கை ஏற்றுமதி செய்யப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளாக மாவட்டத்தில் ஏற்பட்ட கடுமையான வறட்சியால் முருங்கை உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டது. நடப்பாண்டு ஓரளவு மழை பெய்ததன் காரணமாக முருங்கை உற்பத்தி அதிகரித்துள்ளது. வடமதுரை : வேடசந்தூர் தாலுகா விவசாயிகளுக்கு இலவசமாக வினியோகிப்பதற்காக 1.05 லட்சம் மரக்கன்றுகளை அய்யலூர் வனத்துறையினர் பராமரித்து வருகின்றனர். தமிழ்நாடு பல்லுயிர் பரவல் பாதுகாப்பு மற்றும் பசுமையாக்கும் திட்டத்தின் கீழ் அய்யலூர் வனத்துறை சார்பில் மரக்கன்றுகள் வளர்க்கும் பணி பிப்ரவரியில் துவங்கியது. அய்யலூர்-மணியக்காரன்பட்டி ரோட்டில் உள்ள தோட்டத்தை குத்தகைக்கு எடுத்து வனத்துறையினர் தேக்கு, குமிழ், பூவரசு,

வேம்பு, புளி வகை மரக்கன்றுகளை பாலித்தீன் பைகளில் வளர்த்து வருகின்றனர். அய்யலூர் வனச்சரக அலுவலர் ராஜாமணி கூறுகையில்,""வேடசந்தூர் தாலுகாவை சேர்ந்த அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தின் கீழ் இலவசமாக மரக்கன்றுகளை பெறலாம். விவசாயிகள் நிலத்தின் சிட்டா நகல், 2 போட்டோக்களை கொண்டு வர வேண்டும். வனத்துறை சார்பில், விவசாயிகளின் நிலத்தில் மண் வகை ஆய்வு செய்யப்பட்டு அதற்கு தகுந்த மரத்தினை வளர்க்க பரிந்துரை செய்யப்படும்," என்றார். மரக்கன்றுகளை பெற விரும்புபவர்கள் 94869 49971 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

## விவசாயிகளுக்கு வினியோகிக்க 1.05 லட்சம் மரக்கன்றுகள் தயார்

## தரமான விதைகளை விற்பனை செய்யுங்கள்; கலெக்டர் ஹரிஹரன் வலியுறுத்தல்

விருதுநகர் : "விருதுநகர்மாவட்ட விதை விற்பனையாளர்கள், முளைப்புத்திறன் நன்குள்ள தரமான விதைகளை மட்டுமே கொள்முதல் செய்து, விற்பனை செய்ய வேண்டும்,"என, கலெக்டர் ஹரிஹரன் தெரிவித்துள்ளார். அவரது அறிக்கை:பருவமழைகாலம் துவங்கிய நிலையில், விதை கொள்முதல் பட்டியல்களில் விதைக்குவியல்கள் எண் குறிப்பிட வேண்டும். விதை உரிமம் பெற்ற இடங்களில் மட்டுமே, அவற்றை இருப்பு வைத்து நல்ல தரமான விதைகளை விவசாயிகளுக்கு விற்க வேண்டும். ஒவ்வொரு விதைக்குவியலுடன் அதன் தரம்பற்றிய பகுப்பாய்வு முடிவுகள் விபரம், ஆய்வின் போது, விதை ஆய்வாளர்களுக்கு காண்பிக்க வேண்டும். விற்பனைக்குரிய விதைகளின் பெயர், ரகம், குவியல் எண், காலாவதி நாள், இருப்பு அளவு மற்றும் விலை விபரத்தை, தவறாது விவசாயிகள் பார்வைக்கு படும்படியாக எழுதி வைக்க வேண்டும். இருப்பிலுள்ள விதைக்குவியல்களை ரகம் வாரியாக, குவியல் வாரியாக, உரம் மற்றும் பூச்சிமருந்து இல்லாத இடங்களில் வைக்க வேண்டும். காலாவதி விதைகளை விற்பனை செய்தால், விற்பனையாளர்கள், வினியோகஸ்தர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் மீது,

விதைகள் சட்டம் 1996ன்படி நடவடிக்கை எடுக்கப்படும். விவசாயிகள், விதை சம்பந்தப்பட்ட குறைபாடுகளை 04562 252 186 என்ற தொலைபேசி எண்ணில், அலுவலக நேரங்களில் தெரிவிக்கலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>21ம் தேதிக்குள் அனைத்து கால்நடைகளுக்கும் கோமாரி தடுப்பூசி</u>**

<u>மலட்டுத்தன்மையை எளிதில் நீக்கலாம்</u>

முகாமை துவக்கிவைத்து கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் குழந்தைசாமி பேசியதாவது: க.பரமத்தி வட்டாரத்தில் மாடுகள் அதிகமாக வளர்த்து வரும் விவசாயிகள் மாடுகள் கன்று ஈன்ற பிறகு 3 முறை பருவநிலைக்கு வந்து மாடுகள் சினைகளுக்கான ஊசி போட்டோ அல்லது காளையுடன் சேர்த்து விட்ட பின்னரும் சினை பிடிக்காமல் இருந்தால் அவைகள் மலட்டுத் தன்மை ஏற்பட்ட மாடுகளாகும் இதனால் விவசாயிகளுக்கு பொருளாதார இழப்பு ஏற்படுவதுடன் பால் உற்பத்தி குறைய வாய்ப்பு உள்ளது. எனவே அருகேயுள்ள அரசு கால்நடை மருத்துவமனைக்கு கால்நடைகளை அழைத்து வந்து உரிய மருத்துவரின் ஆலோசனையை பின்பற்ற வேண்டும். பெருமபாலும் மாடுகளுக்கு தாது உப்பு சத்து பற்றாக்குறையால் சினை தாமதமாகிறது. எனவே கால்நடை பல்கலைக்கழகத்தில் வழங்கப்படும் தாது உப்பு கலவையை மருத்துவரின் ஆலோசனை படி அன்றாடம் ஒரு மாதத்திற்கு மாடுகளுக்கு வழங்குவதன் மூலம் மலட்டுத்தன்மையை எளிதில் நீக்கலாம் என்றார். க.பரமத்தி, :

க.பரமத்தி அருகேயுள்ள சின்னதாராபுரம் அரசு கால்நடை மருந்தகம் சார்பில் தொக்குப்பட்டிபுதூரில் நேற்று நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமுக்கு கால் நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் குழந்தைசாமி தலைமை வகித்தார். ஒன்றிய கவுன்சிலர் கலை யரசி, ஊராட்சி தலைவர் இந்திராணி

ஆகியோர் முன்னிலை வகித்தனர். கால்நடை நோய் புலனாய்வு பிரிவு உதவி இயக்குநர் முருகேசன் பேசியதாவது:

கோமாரி நோயை கிராமப்புறங்களில் கால் கட்டு, வாய்ச்சப்பை என்பர். இந்த நோய் விரைவில் பரவக்கூடிவை. நோயுற்ற கால்நடைகளில் கடும் காய்ச்சல், வாய், நாக்கு, மடி, காம்பு, குளம்புகளுக்கு இடையே கொப்பளங்கள் புண்கள் காணப்படும். இந்நோயுற்ற கால்நடைகளின் உமிழ்நீர், சிறுநீர், பால், சாணம், உபயோகப்படுத்திய தண்ணீர், தீவனத்தொட்டிகள், தீவனம், காற்று மூலம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இந்த வியா தியை பரவுகின்றன. இந் நோய் தாக்குதலால் கறவை கால்நடைகளின் பால் உற்பத்தி பாதிக்கப்படுவதுடன் சினைப்பிடிப்பது தடைபடும். பாதிக்கப்பட்ட மாடுகளின் பாலை இளம்கன்றுகள் குடிப்பதன் மூலம் குட்டிகள் பாதிக்கப்பட்டு இறக்க நேரிடும். கரூர் மாவட்டத்தில் முற்றிலும் தடுக்கத் தேவை யான நடவடிக்கை எடுத்து 7வது சுற்றாக கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் அனைத்து கிராமங்களிலும் இலவசமாக தடுப்பூசி போடும் பணி இம்மாதம் 21ம் தேதி வரை நடைபெறும் எனவே பண்ணையாளர்கள் அனைவரும் தங்கள் அனை க்கு கால்நடைகளையும் தடுப்பூசி அளிக்கும் இடத்திற்கு கொண்டுசென்று, கோமாரி நோய் தடுப்பூசியை முன்னெச்சரிக்கையாக மாடுகளுக்கு தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம் என்றார். முன்னதாக, சின்னதாராபுரம் கால்நடை மருத்துவர் மோகன்ராஜ் வரவேற்றார். முடிவில் கால்நடை ஆய்வாளர் ஜானகி நன்றி கூறினார்.

## <u>கால்நடைகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம்</u>

அரவக்குறிச்சி, : அரவக்குறிச்சி ஒன்றியம், வெஞ்சமாங்கூடலுர் கிழக்கு ஊராட்சி பரப்புத் துறை கிராமத்தில் கால்நடை மருந்தகம் சார்பில் கால்நடைகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம் நடை பெற்றது. ஊராட்சி தலைவர் சாந்தி சிவாஜி தலைமை தாங்கி முகாமைத் துவக்கிவைத்தார். ஆவின் பால் கூட்டுறவு சங்கச் செயலாளர் கணேசன் முன்னிலை வகித்தார். முகாமில் வெள்ளாடு கள் மற்றும் செம்மரி ஆடுகளுக்கு நோய் தடுப்பூசி, பசு மற்றும் எருமைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி, கோழிகளுக்கு கழிச்சல்

தடுப்பூசி போடப்பட்டது. மேலும் குடற்புழு நீக்கல், கருவூட்டல், மலடு நீக்கல், சினை பரிசோதனை உள்ளிட்ட சிகிச்சை கால்நடைகளுக்கு இலவசமாக அளிக்கப்பட்டது. வெஞ்ச மாங்கூடலுஈர் கால்நடை மருந்தக டாக்டர் நாகராஜன், கால்நடை பராமரிப்பு உதவியாளர் பாலசுரேந்திரன் உள்ளிட்ட கால்நடை மருத்துவக் குழுவினர் கால்நடைகளுக்கு சிகிச்சையளிக்கனர்.இதைக் தொடர்ந்கு, சிறந்த கலப்பின கிடேரி கன்றுகளுக்கான ஊக்கப் பரிசுகளை அதனை வளர்க்கும் கால்நடை விவசாயிகளிடம் வெஞ்சமாங்கூடலுஈர் கிழக்கு ஊராட்சி தலைவர் சாந்தி சிவாஜி வழங்கிப் பாராட்டினார்.

## கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

பொன்னமராவதி, : பொன்னமராவதி அருகே உள்ள கேசராபட்டியில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடந்தது. கடந்த 1ம் தேதி முதல் வரும் 21ம் தேதி வரை முகாம் அமைத்து கால்நடைகளுக்கு தடுப்பூசி போட தமிழக அரசு உத்திரவிட்டுள்ளது. அதன் அடிப்படையில் கேசராபட்டியில் ஊராட்சித்தலைவர் முருகேசன் முகாமை தொடங்கி வைத்தார். ஆலவயல் அரசு கால்நடை மருத்துவமனை டாக்டர் சேரன் தலைமையிலான மருத்துவக்குழுவினர் 200க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட்டனர். இதில் ஒன்றியக்கவுன்சிலர் கமர்தீன், துணைத்தலைவர் செல்லையா, ஊராட்சி உறுப்பினர் அடைக்கி, ஊராட்சி செயலாளர் அழகப்பன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## தொடர் சாரல் மழையால் பசுமையான மேய்ச்சல் நிலங்கள் விவசாயிகள் மகிழ்ச்சி

கம்பம், : கம்பம் பகுதியில் பெய்த தொடர் சாரல் மழையால், மேய்ச்சலில் நிலங்களில் புற்கள் முளைத்து, பசுமையாக காட்சியளிக்கின்றது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கம்பம் பள்ளதாக்கில் கம்பம், கூடலூர், ஆங்கூர்பாளையம், நாராயணத்தேவன்பட்டி, சுருளிப்பட்டி,

க.புதுப்பட்டி, காமயகவுண்டன்பட்டி ஆகிய ஊர்களில், விவசாயிகள், விவசாயத்தை தவிர்த்து கால்நடை வளர்ப்பதை உபதொழிலாக பார்த்து வருகின்றனர். இயற்கையில் வளரும் பசுமையான இலைதழைகள், புற்கள், கீரைவகைகளை கறவை மாடுகள் சாப்பிடுவதால் அதிகமான பால் சுரக்கும். இதனால், விவசாயிகள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கம்புமாவு, சோளமாவு, புண்ணாக்கு, பருத்திகொட்டை போன்றவை வெளிமார்க்கெட்டில் விலை உயர்வால் விவசாயிகள் மிகவும் அவதிப்பட்ட நிலையில், சாரல் மழையால் மேய்ச்சல் நிலங்கள் பசுமையானது விவசாயிகளுக்கும், கால்நடை வளர்ப்போருக் கும் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இவ்வாறு இருக்கையில், கேரளாவில் பெய்த மழையால், பெரியாறு அணை நீர்மட்டம் 132 அடியை தாண்டி உள்ளது. இதனால், கம்பம் பள்ளதாக்கு விவசாயத்திற்காக தண்ணீர் திறக்கப்பட்டதால், வயல்வெளிகள் பசுமையாக காட்சியளிக்கிறது. மறுபுறம் சாரல்மழை அவ்வப்போது கம்பம் மலையடிவாரத்தை நனைத்து வருகிறது. இதனால் தீவனங்களுக்காக விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர் அலைவது குறையத்தொடங்கி உள்ளது. இதுகுறித்து கால்நடைவகளை வளர்க்கும் கருப்பதேவர் கூறுகையில், 'கம்பம் பகுதியில் பெய்த சாரல்மழை மேய்ச்சலில் நிலங்களில் புற்கள் இலைதழைகள் முளைக்கத் தொடங்கி பசுமையாக காட்சி அளிக்கிறது. இது ஆடு, மாடு வளர்ப்பவர்களுக்கு பெரும் மகிழ்ச்சியை உருவாக்கி உள்ளது' என்றார். தேங்காய் எண்ணெயில் தாய்ப்பாலுக்கு இணையான சத்து தென்னை சாகுபடி கருத்தரங்கில் தகவல்

பட்டுக்கோட்டை,: தேங்காய் எண்ணெயில் தாய்ப்பாலுக்கு இணை யான லாரிக் அமிலம் மற்றும் மிதமான கொழுப்பு சத்துக்கள் உள்ளது என்று கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டது. பட்டுக்கோட்டை அருகேயுள்ள வேப்பங்குளம் தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் சார்பில் தென்னை சாகுபடி கருத்தரங்கம் நேற்று நடைபெற்றது. கருத்தரங்கிற்கு கோவை வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் ராமசாமி தலைமை வகித்தார். தஞ்சை கலெக்டர் சுப்பையன் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் கலெக்டர் பேசுகையில்; தென்னையின் இளநீர் மனிதர்களுக்கு பல வகையிலும் உடல் நலத்திற்கு பெருந்துணை

செய்கிறது. கலப்படம் இல்லாத இயற்கை தந்த கொடைகளில் இளநீர் ஒரு சிறந்த குளிர்பானம் ஆகும். தேங்காய் மற்றும் தேங்காய் எண் ணெயில் தாய்ப் பாலுக்கு இணை யான லாரிக் அமிலம் மற்றும் மிதமான கொழுப்பு சத்துக்கள் உள்ளது. இவை மனிதனை தாக் கும் நோய்களுக்கு எதிர்ப்பு சக்தியை உடலுக்கு தரக்கூடியதாகும். தமிழக மக்களிடம் இளநீர் மற்றும் தேங்காய் எண்ணெயின் மருத்துவ குண நலன்களை பற்றிய விழிப்புணர்வை பரப்புதல் அவசியம். சுவை மிக்க இளநீர் எண்ணெய் சத்து மிகுந்த கொப்பரை மற்றும் அதிக மகசூல் தரக்கூடிய ரகங்களை உருவாக் கிட வேண்டும். ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையம், காட்டுத்தோட்டம் மண் நீர் ஆராய்ச்சி நிலையம், வேப்பங்குளம் தென்னை ஆராய்ச்சி நிலையம் போன்ற விவசாயம் சார்ந்த ஆராய்ச்சி நிறுவனங்கள் தஞ்சை மாவட்டத்தில் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி விவசாயிகள் அதிக லாபம் பெறுவதற்கு பல்வேறு ஆலோசனைகள் வழங்கி வருகிறது. தென்னந் தோப்பில் ஈரப்பதத்தை பயன்படுத்தி சில உரங்களை தயார் செய்ய லாம்.மேலும் தென்னையை பயன்படுத்தி பல்வேறு உற்பத்தி பொருட்களை தயார் செய்யும் வாய்ப்பு அதிக அளவில் உள்ளது. தென்னை சார்ந்த பொருட்களின் ஏற்றுமதி மூலம் நமது நாட்டிற்கு அன்னிய செலவாணி ஈட்டிக்தர முடி யும். புதிய தொழில் நுட்பங் களை பின்பற்றி தென்னை சார்ந்த தொழில்களை வெற்றிகரமாக செய்வதற்கு இந்த கருத்தரங்கம் பயனுள்ள வகையில் அமையும் என்றார். கருத்தரங்கில் கோயம்புத்துடிர் தோட்டக்கலை கல்லுடிரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் மாரியப்பன், பட்டுக்கோட்டை எம்எல்ஏ. என்.ஆர்.ரெங்கராஜன், மதுக்கூர் கூட்டுறவு சங்க பால்வளத் தலைவர் துரைசெந்தில், பட்டுக்கோட்டை நகராட்சித் தலைவர் ஜவஹர்பாபு, கொச்சி தென்னை வளர்ச்சி வாரிய முன்னாள் துணைத்தலைவர் கலைச்செல்வன், சென்னை தென்னை வளர்ச்சி வாரிய மண்டல இயக்குநர் லுடிங்கார்ஒபேட், மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சேகர், வேப்பங்குளம் ஊராட்சித் தலைவர் சிங்கத்துரை, ஒன்றியக்குழு உறுப்பினர் முருகானந்தம், முன்னாள் தென்னை வளர்ச்சி வாரிய உறுப்பினர் மலைஅய்யன், ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குநர் ராஜேந்திரன், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக பயிர்

பாதுகாப்பு மைய இயக்குநர் ராமராஜ், பேராசிரியர்கள் கணேசமூர்த்தி, மாரிமுத்து, மோகன்தாஸ், ராஜமாணிக்கம், ராஜப்பன் மற்றும் ஏராளமான தென்னை விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>நீர்மட்டம் 133 அடியை எட்டுகிறது: முல்லைப்பெரியாறு அணையில் துணை கண்காணிப்பு குழு மீண்டும் ஆய்வு</u>**



குமுளி, முல்லைப்பெரியாறு அணை நீர்மட்டம் 133 அடியாக எட்டும் நிலையில் உள்ளது. இதையடுத்து, துணை கண்காணிப்பு குழுவினர் நேற்று அணையில் மீண்டும் ஆய்வு மேற்கொண்டனர்.

<u>துணை கண்காணிப்பு குழு ஆய்வு</u>

முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்ட நிலவரம் மற்றும் பாதுகாப்பு குறித்து ஆய்வு மேற்கொள்ள, மத்திய நீர்வள ஆணையத்தின் செயற்பொறியாளர் உம்மன்கர்ஜித் கரிஷ் கிரீஷ் தலைமையில் தமிழக–கேரள மாநில அதிகாரிகள் 5 பேரை கொண்ட துணை கண்காணிப்பு குழு

அமைக்கப்பட்டது. இந்த குழு கடந்த 1–ந் தேதி முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்ட நிலவரத்தை முதன்முறையாக ஆய்வு செய்தது. இதையடுத்து அணை நீர்மட்டம் 130 அடியை தாண்டியவுடன் வாரம் ஒரு முறை நீர்மட்ட நிலவரத்தை ஆய்வு செய்து அறிக்கை அனுப்ப துணை கண்காணிப்பு குழுவிற்கு சுப்ரீம்கோர்ட்டு நியமித்த மூவர் குழு உத்தரவு பிறப்பித்தது. இதன் அடிப்படையில் கடந்த 5–ந் தேதி அணை நீர்மட்டம் 131.50 அடியாக உயர்ந்ததை அடுத்து துணை கண்காணிப்பு குழுவினர் அணைக்கு சென்று ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வின்போது கேரள மாநில அதிகாரிகள் வரவில்லை. இந்நிலையில் வாரந்தோறும் ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்ற உத்தரவின் பேரில், உம்மன்கர்ஜித் கரிஷ் கிரீஷ் தலைமையிலான ஐவர் குழுவினர் நேற்று முல்லைப்பெரியாறு அணையில் 3–வது முறையாக ஆய்வு செய்தனர். இந்த ஆய்வின் போது தமிழக தரப்பில் செயற்பொறியாளர் மாதவன் விடுப்பில் உள்ளதால், அவருக்கு பதிலாக பெரியாறு–வைகை கோட்ட செயற்பொறியாளர் முத்துப்பாண்டியன், உதவி கோட்ட பொறியாளர் சவுந்தரம் ஆகியோரும், கேரள மாநில தரப்பில் நீர்ப்பாசனத்துறை செயற்பொறியாளர் ஜார்ஜ் டேனியல், உதவி பொறியாளர் பிரசீது ஆகியோரும் உடன் சென்றனர்.

நீர்மட்டம்

இந்த குழுவில் உள்ள தமிழக அதிகாரிகள் தனி படகிலும், மத்திய நீர்வள ஆணைய செயற்பொறியாளர் மற்றும் கேரள மாநில அதிகாரிகள் மற்றொரு படகிலும் முல்லைப்பெரியாறு அணையின் கேலரி பகுதிக்கு சென்றனர். அங்கு கேலரி பகுதியை பார்வையிட்ட இந்த குழுவினர் அணை மதகு பகுதியில் நீர்மட்டம் எந்தளவு உயர்ந்துள்ளது என்பது குறித்தும் ஆய்வு மேற்கொண்டனர். பின்னர் பேபி அணையை பார்வையிட்ட குழுவினர் அங்கிருந்து தேக்கடிக்கு மீண்டும் திரும்பி வந்தனர். முன்னதாக அவர்கள் கேரள மாநிலம் குமுளியில் உள்ள கேரள நீர்ப்பாசனத்துறை அலுவலகத்தில் ஆலோசனை கூட்டம் நடத்தினர். இந்த கூட்டத்தில், துணை கண்காணிப்பு குழுவிற்கு நிரந்தர அலுவலகம் அமைப்பது தொடர்பாக வருகிற 15–ந் தேதி மூவர் குழு வருகையின் போது முடிவு எடுக்க தீர்மானிக்கப்பட்டது. நேற்று அணை நீர்மட்டம் 132.80 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்து

வினாடிக்கு 770 கனஅடியாகவும், நீர் திறப்பு வினாடிக்கு 500 கனஅடியாகவும் உள்ளது. அணையில் 5 ஆயிரத்து 352 மில்லியன் கன அடி நீர் இருப்பு உள்ளது. அணைப்பகுதியில் நேற்று முன்தினம் 8 மில்லிமீட்டர் மழை பெய்து உள்ளது.

**<u>விதை உற்பத்தியாளர்களுக்கு பயிற்சி முகாம்</u>**

கரூர் மாவட்ட விதை சான்று மற்றும் அங்கக சான்றளிப்பு துறை மூலம் கரூர் மாவட்டத்தில் உள்ள அரசு விதை உற்பத்தி யாளர்களுக்கான புத்தாக்க பயிற்சி முகாம் நடைபெற்றது. வேளாண்மை இணை இயக்குனர் கூட்டரங்கில் நடைபெற்ற இந்த முகாமிற்கு வேளாண்மை இணை இயக்குனர் தெய்வேந்திரன் தலைமை தாங்கினார். சந்திரசேகரன் முன்னிலை வகித்தார்.விதைச்சான்று உதவி இயக்குனர் கைலாச பதி, விதை சான்று, விதை சட்ட அமலாக்கம், விதை பரிசோதனை, அங்கக சான்றளிப்பு ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றி விளக்கம் அளித்தார். மேலும் விதை ஆதாரம், விதைப்பண்ணை பரப்பு மற்றும் அந்தந்த பயிர்களுக்கு உரிய பயிர் விலகு தூரம் பராமரிப்பது குறித்தும் விளக்கம் அளித்தார். முகாமில் வேளாண்மை துணை இயக்குனர் ராஜேந் திரன், விதை ஆய்வு துணை இயக்குனர் ரமேஷ்பாபு உள்பட பலர் கலந்து கொண் டனர்.

**<u>பயனாளிகளுக்கு விலையில்லா வெள்ளாடுகள் அமைச்சர் பூனாட்சி வழங்கினார்</u>**



மண்ணச்சநல்லூர் தாலுகா தீராம்பாளையத்தில் அரசின் விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. ஒன்றிய குழு தலைவர் பரமேஸ்வரி முருகன் தலைமை தாங்கினார். தீராம்பாளையம் ஊராட்சி மன்ற தலைவர் கிரிபால் முன்னிலை வகித்தார். அமைச்சர் டி.பி. பூனாட்சி சிறப்புரை ஆற்றி 69 குடும்பங்களுக்கு அரசின் விலையில்லா வெள்ளாடுகளை வழங்கினார். நிகழ்ச்சியில் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் வக்கீல் ரத்தினவேல், அ.தி.மு.க. ஒன்றிய செயலாளர் என்ஜினீயர் ஜெயகுமார், மாவட்ட ஆவின் பால்வள இயக்குனர் எஸ்.எம். ராஜேந்திரன், மாவட்ட கவுன்சிலர் மூக்கன், ஒன்றிய கவுன்சிலர் கதிர்வேலு, ஒன்றிய இளைஞர் இளம் பெண்கள் பாசறை செயலாளர் அய்யம்பாளையம் ஜி.ரமேஷ் ஆகியோர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.